## திராவிட இயக்க இதழ்கள் - 'தமிழ்த்தேன்'




திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரும், பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞருமான கா.வேழவேந்தன் அவர்களை பொறுப்பாசிரியராகவும், புலவர் கண்ணபிரானார் என்பவரை, ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்த இதழ், 'தமிழ்த்தேன்'.

1967 ஆகஸ்ட் மாதம் முதல் இந்த இதழ் வெளிவந்திருக்கிறது. சென்னையில் அச்சாகி வெளியான இந்த இதழ், தமிழுணர்வு மாத இதழாக மலர்ந்தது. சில மாதங்களுக்குப் பிறகு மாதம் இருமுறை இதழாக வெளிவரத் தொடங்கியது. முதல் இதழின் முகப்பு அட்டையில், திருவள்ளுவர் படம் இடம்பெற்றிருக்கிறது. அதன் பிறகு வந்த இதழ்களில் படங்கள் எதுவுமில்லாமல், முகப்பு அட்டையிலேயே தலையங்கம், கட்டுரைகள் உள்ளிட்ட விஷயங்கள் இடம்பிடித்தன.

சுமார் 50 பக்கங்கள் கொண்ட இந்த இதழில் சிறுகதைகள், தொடர் கதைகள், துணுக்குகள், கட்டுரைகள், மரபுப் பாடல்கள் எனப் பல விஷயங்களைத் தாங்கி வெளிவந்தது. குறிப்பாக, பெண்ணுரிமை பற்றி எழுத தனிப் பகுதியையே இந்த இதழ் ஒதுக்கி இருந்தது. தமிழுணர்வோடு திராவிட இயக்க அரசியல் உணர்வையும் விதைத்துள்ளது இந்த இதழ்.

## ஃப்ளாஷ்பேக்





ஆ.இரா.அருண்

### கொடியும் கல்வெட்டும்!

1986-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் அம்பத்தூர், விஜயலட்சுமிபுரம் பகுதிக்கு இளைஞர் அணி நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்திருந்தார் அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். கழக இருவண்ணக் கொடியை ஏற்றி, இளைஞர் அணி சார்பில், வைக்கப்பட்ட கல்வெட்டைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார். இளைஞர் அணி உறுப்பினராக நானும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றேன். உடன், அம்பத்தூர் நகரச் செயலாளர் மிசா பா.இரவிக்கண்ணன், நகரத் துணைச் செயலாளர் ஆ.இரா.நாதன் மற்றும் கழக முன்னணியினர்.

**- ஆ.இரா.அருண், மாவட்டப் பிரதிநிதி, அம்பத்தூர் வடக்கு பகுதி., சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சேலம் கல்லூரிகள்!

1958-ஆம் ஆண்டு, சேலம் மாவட்ட தி.மு.க மாநாடு பிப்ரவரி 15 மற்றும் 16 தேதிகளில் நடைபெற்றது. மாநாட்டுத் தலைவர் கலைஞர், கழகக் கொடி ஏற்றித் தொடங்கி வைத்தார். அந்த மாநாட்டில், 'சேலம் பகுதியில் கல்லூரிகள் அமைக்க வேண்டும்' என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "சேலம் மாவட்டத்தில் ஒரே ஒரு கல்லூரி உள்ளதால், மாணவர்களுக்கு வசதி இல்லாமல் போகிறது. இக்குறையை நீக்க வடசேலம், தென்சேலம் என கிருஷ்ணகிரி, நாமக்கல் நகரங்களில் கல்லூரி அமைக்கவும், சேலத்தில் பெண்கள் கல்லூரியும், தொழிற்கல்லூரியும் அமைக்க, அரசை வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டது. அந்தக் கோரிக்கைகள் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் நிறைவேறின.

## முதன் முதலில் 15

**ந.வினோத்குமார்**

திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் 'திராவிட மரபு' தொடர் இது...

# கலகத்தின் நிறம் கருப்பு!



பொதுவாகவே, கருப்பு நிறம் என்றால், பலருக்கும் உண்டு வெறுப்பு. காரணம், 'அது ஓர் அபசகுனம்' என்ற மூடநம்பிக்கை. அந்த மூடநம்பிக்கையாளர்கள் வணங்கும் பல கடவுளர் சிற்பங்கள் கருங்கல்லில்தானே இருக்கிறது என்று கேட்டால், அதற்கு அவர்களிடம் முறையான பதில் இருக்காது. கடவுளர் கருப்பாக இருந்தால், பரவாயில்லை. ஆனால், மனிதர்கள் கருப்பு நிறமாக இருந்தால், அவர்களை வேறுபடுத்திப் பார்ப்பது மக்களின் இயல்பாகிவிட்டது. இந்த இரட்டைத்தன்மைதான் நம்பிக்கைக்கும் மூடநம்பிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம்.

சருமத்தின் நிறம் சற்று மாறினால்கூட நம்மை ஒதுக்கி வைக்கிற சமூகத்தில், சட்டையின் நிறம் கருப்பாக இருந்தால், அது கலகத்தின் குறியீடாகப் பார்க்கப்படுகிறது. அபசகுனமாகப் பார்க்கப்பட்ட ஒரு நிறத்தை, கலகத்தின் நிறமாக மாற்றியது, திராவிட இயக்கங்கள் செய்த கலாச்சாரப் புரட்சிகளில் ஒன்று..! அது தந்தை பெரியார் தலைமையிலான திராவிடர் கழகத்தின் தொண்டர் படையால் சாத்தியமாயிற்று. அந்தக் கருஞ்சட்டைப் படைதான், கருப்புச் சட்டையைப் பொதுவெளியில் தைரியமாக அணிவதை வழக்கமாக்கிய முதல் இயக்கம்.

**சூத்திரர்கள் தங்கள் இழிநிலையை விலக்க, அனைவரும் கருப்புச் சட்டை அணிய வேண்டும் என்று பெரியார் முழங்கினார். அந்தப் படையின் முதல் தொண்டராக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னைப் பதிவு செய்துகொண்டார்.**

'திராவிட விடுதலைப் படை' என்ற பெயரில் தொண்டர் படை ஒன்று நிறுவ வேண்டும் என்ற தீர்மானம், 1945-ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில்தான் நிறைவேற்றப் பட்டது. பிறகு, அதே ஆண்டு செப்டம்பர் 29 அன்று வெளியான 'குடிஅரசு' இதழில், 'கருப்புச் சட்டைப் படை' என்ற அறிவிப்பை பெரியார் வெளியிட்டார்.

கழகத் தொண்டர் படை நிறுவுவது பற்றி, பெரியாரும் அண்ணாவும் பேசிக் கொண்டிருந்த போது, தொண்டர் படைக்கு எந்த நிறச் சட்டையைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற பேச்சு எழுந்தது. அப்போது, மஞ்சள் காங்கிரசின் நிறமாகவும், சிவப்பு கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நிறமாகவும், பச்சை முஸ்லிம் லீக்கின் நிறமாகவும், ஊதா 'ராடிக்கல் டெமாக்ரடிக்' கட்சியின் நிறமாகவும் பார்க்கப்பட்டு வந்தன. அதுபோல, கழகத் தொண்டர் படைக்குக் கருப்புச் சட்டையை அடையாளமாகக் கொள்ளலாம் என்று அண்ணா கூறினார்.

சட்டையின் நிறத்தை அந்த இரு தலைவர்களும் ஒருமித்து ஏற்றுக்கொண்டாலும், அந்தச் சட்டையை யாரெல்லாம் அணிவது, என்பதில் இருவருக்கும் மாற்றுக் கருத்துகள் இருந்தன. பெரியார், திராவிடர் கழகத்தினர் அனைவரும் கருப்புச் சட்டை அணிய வேண்டும் என்று சொல்ல, அண்ணாவோ திராவிடர் கழகத்தின் தொண்டர் படையினர் மட்டும் அணிந்தால் போதும் என்றார்.

சூத்திரர்கள் தங்கள் இழிநிலையை விலக்க, அனைவரும் கருப்புச் சட்டை அணிய வேண்டும் என்று பெரியார் முழங்கினார். அந்தப் படையின் முதல் தொண்டராக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னைப் பதிவு செய்துகொண்டார்கள்.

பிறகு, 1946-இல் மதுரையில் முதலாவது மாகாண கருப்புச் சட்டைப் படை மாநாடு என்ற பெயரிலேயே மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டைக் கலைக்க வேண்டும் என்றுதான் கலவரம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து, 1948-ஆம் ஆண்டில், காந்தியார் படுகொலை செய்யப்பட்டதையொட்டி, அன்றைய ஓமந்தூரார் ஆட்சி 'கருப்புச் சட்டைப் படை'க்குத் தடை விதித்தது. அதை எதிர்த்து, அண்ணா அவர்கள் கருப்புச் சட்டை அணிந்துகொண்டு போராட்டம் நடத்தினார். இப்படித்தான் கலகத்தின் குறியீடான கருப்புச் சட்டை, அண்ணாவால் எதிர்ப்பின் அடையாளமாக நிறம் மாறியது.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை


**கௌதம் ராஜ்** 15

"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# கல்வியில் ஜனநாயகம்!

இன்றைக்கு இந்திய மாநிலங்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு, மிக முக்கியமான காரணங்களாக ஆங்கில மொழி அறிவும், இருமொழிக் கொள்கையும் குறிப்பிடப்படுகின்றன. அறிவியல் மொழியாக ஆங்கிலத்தையும், தாய் மொழியாக தமிழையும் தக்கவைத்துக் கொண்டதே தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகச் சுட்டிக்காட்டப்படுவதுண்டு.

**ஆங்கிலக் கல்வியின் தோற்றம் எப்போது நடந்தது? அப்படி ஒரு மொழி இங்கு அறிமுகப்படுத்த வேண்டியதற்கான அரசியல் காரணங்கள் என்னென்ன? மெக்காலே ஏன் இதைச் செய்யவேண்டும்?**




அத்தகைய ஆங்கிலக் கல்வியின் தோற்றம் எப்போது நடந்தது? அப்படி ஒரு மொழி இங்கு அறிமுகப்படுத்த வேண்டியதற்கான அரசியல் காரணங்கள் என்னென்ன? மெக்காலே ஏன் இதைச் செய்யவேண்டும்? சமகாலத்தில் காலனிய நீக்கம் (DE-COLONISATION) என்ற பெயரில் இந்துத்துவ சக்திகளால் மெக்காலே விமர்சிக்கப்படுவதற்கான காரணங்கள் என்ன என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நூல்தான் 'நவீன கல்விக் கொள்கையை நோக்கி.. மெக்காலே கூறியது என்ன?' எனும் புத்தகம்.

கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டுக் கழித்து, இந்தியர்களின் சமூக நிலையை மாற்ற, அவர்களுக்கு விஞ்ஞான மற்றும் அறிவியல் கல்வி புகட்ட வேண்டிய அவசியத்தை இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் மெக்காலே எடுத்து வைத்த *"Minute by the Honourable T.B. Macaulay(2/2/1835)"* அறிக்கைதான், இந்தச் சிறு நூலில் தமிழ் மொழிபெயர்ப்பாக மாற்றம் கண்டுள்ளது. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

மெக்காலேவின் நவீன கல்விக் கொள்கையைச் சிலர் எதிர்ப்பதற்கான மூலக் காரணம், அது கல்வியை ஜனநாயகப்படுத்தியது என்பதற்காகத்தான். மெக்காலேவின் இந்த அறிக்கையைப் படிக்கும்போது அவரது நோக்கம் தெளிவாகிறது. அவர் வார்த்தைகளிலேயே சொல்ல வேண்டுமானால், 'இந்த லட்ச ரூபாய், இந்திய இலக்கியத்தைப் புதுப்பிப்பதற்கு மட்டுமின்றி பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு அறிவியல் ஞானத்தை அறிமுகம் செய்து மேம்படுத்துவதற்குமானது' என்கிறார். இத்தகைய அறிவியல் ஞானம் பெறுவதற்கு ஆங்கிலம் அவசியம் என்கிறார்.

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசும்போது, சமஸ்கிருதத்தில் இருக்கும் மூடத்தனங்களையும் அவர் விமர்சிக்கத் தவறவில்லை. ஓர் இடத்தில் 'அமிழ்தும் வெண்ணையும் நிரம்பி வழியும் கடல்களைக் குறித்துப்பேசும் புவியியலை ஏற்றுக்கொள்வோமா?' என்று புராணங்களை நக்கலடிக்கிறார். அதே போல் துறை சார் நிபுணத்துவம் பெற்ற மொழியாக சமஸ்கிருதத்தை விட ஆங்கிலமே விளங்குகிறது, என்பது அவரது வாதமாக இருந்துள்ளது. ஆங்கிலம் இங்குள்ள விளிம்பு நிலை மக்களை மேம்படுத்த உதவும் என்று அவர் கருதினர். அது நம்மை மேம்படுத்தியுள்ளது என்பதே சமகால யதார்த்தம்.


மேலும் கல்வி என்பது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். அதற்கு நவீன அறிவியல் பண்புகளைக் கொண்ட ஆங்கிலம் அவசியம் என்றும் அவர் நினைத்திருந்தார். இதுவே நவீன ஆங்கிலக் கல்வியை இங்கு அறிமுகப்படுத்துவதற்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்தது என்பதை இந்த சிறு நூல் நமக்கு மிகத் தெளிவாக உணர்த்துகிறது.

மெக்காலேவின் நோக்கம் மகத்தான ஒன்றாக இருந்திருக்கிறது என்பதை சான்றாதாரங்களோடு பொதுவெளியில் எடுத்து வைக்கிறது இந்நூல். ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உரக்கச் சொல்ல நாம் அனைவரும் படிக்க வேண்டிய நூல் இது.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 505

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131